# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

WITH COURAGE AND FAITH

## தொலைதூரக் கல்வி இயக்ககம்

### எம்.பி.ஏ. இரண்டாம் ஆண்டு

**கல்வியாண்டு (2021 - 2022)**

**இயல்பறிதாள் தலைப்புகள்**

இக்கையேட்டில் ஒப்படைப்புகளுக்கான தலைப்புகள் உள்ளன. திட்ட ஆய்வேடு எடுத்த மாணவர்கள் முதல் **6 இயல்பறி தாள்களுக்கு** மட்டும் ஒப்படைப்புக்களை கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைப்படி மாணவர்கள் எழுதி சமர்ப்பிக்க வேண்டும்.

திட்ட ஆய்வேடு எடுக்காத மாணவர்கள் **8 இயல்பறி தாள்களுக்கும்** ஒப்படைப்புக்களை கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைப்படி எழுதி சமர்ப்பிக்க வேண்டும்.

சமர்ப்பிப்பதற்குரிய கடைசி நாள் : 16/03/2022

காலதாமதக் கட்டணமாக **ரூ. 300/-** செலுத்திச் சமர்ப்பிப்பதற்குரிய
கடைசி நாள் : 19/04/2022

**குறிப்பு**

1. **19/04/2022** க்குப் பிறகு அனுப்பப்பெறும் இயல்பறிதாள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.
2. இயல்பறிதாள்கள் மாணவரின் கையெழுத்தில் அமையவேண்டும். தட்டச்சுச் செய்யப் பட்டதாகவோ, அச்சிடப்பெற்றதாகவோ, புகைப்பட நகல் எடுக்கப்பட்டதாகவோ இருத்தல் கூடாது.
3. இயல்பறிதாள்கள் முழுநீள வெள்ளைத்தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப் பெற்றிருக்க வேண்டும்.
4. இயல்பறிதாள்கள் (ஒவ்வொரு பக்கத்தின் மேல்புறத்து வலதுபக்க மூலையில் சேர்க்கை எண் குறிக்கப்பெறுவதுடன்) உறையினுள் வைக்கப் பெற்று, இயக்குநர், தொலைதூரக் கல்வி இயக்ககம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர் - 608 002 என்ற முகவரிக்குப் பதிவு அஞ்சலில் அனுப்பப் பெற வேண்டும்.
5. சேர்க்கை எண், எந்தத் தாளுக்குரியது, என்ன தலைப்பு முதலியன முறையாகக் குறிப்பிடப்பெறாத இயல்பறிதாள்கள் கவனத்திற்கு கொள்ளப் படமாட்டா.
6. மாணவர்கள் இயல்பறிதாள்களை அனுப்பும் போது அனைத்து தாள்களுக்கும் உரிய இயல்பறிதாள்களை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பகுதி (Partial) இயல்பறிதாள்கள் மதிப்பெண் பெறுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

ஒவ்வொரு தாளுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு வினாக்களில் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு 15 (பதினைந்து) பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு இயல்பறிதாளும் 25 மதிப்பெண்கள் கொண்டது ஆகும்.

**முனைவர் இரா சிங்காரவேல்**
இயக்குநர்

## 2.1 மனிதவள மேலாண்மை

1. பணியாள் மேலாண்மை VS மனிதவள மேலாண்மை முக்கியத்துவத்தை எதற்கு அளிப்பீர்கள்?. ஆராயவும்.
2. மனிதவள மேலாளரின் தகுதிகள் மற்றும் பண்புகள் நவீன முறைப்படுத்தப்பட்டுள்ளதா என ஆராயவும்.
3. முழுமையான பணி ஓய்வு (After full service) அல்லது முன்னரே பணி ஓய்வு (VRS) நல்லதா? நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் பயன்களை ஆராயவும்.
4. மனிதவள மேலாண்மையில் சுற்றுச்சூழலின் தாக்கம் பற்றி விரிவான விளக்கம் எழுதுக.

## 2.2 சந்தையியல் மேலாண்மை

1. நுகர்வோர் குறைபாடுகளை களைந்தெறிய நிறுவனம் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை வகைப்படுத்தி இதில் நுகர்வோரின் பங்கு பற்றி விவரிக்க.
2. விநியோக வழிமுறைகள் தற்போது நடைமுறையில் இல்லாதது பற்றி தங்களுக்கு தெரிந்த தகவல்களை தெரிவிக்கவும். மொத்த விநியோகம் சில்லறை வணிகம் போன்ற பழங்கால முறைகளை தெரிவிக்கவும்.
3. இந்தியாவில் கூட்டுறவு விற்பனைச் சந்தை உண்மையில் பலன் தருகிறதா?
4. விலை நிர்ணயத்தினை யார் செய்தால் நுகர்வோர் பாதிக்காமல் இருக்க முடியும்.

## 2.3 நிதியியல் மேலாண்மை

1. முதலீட்டு முடிவுகள் மற்றும் முதல் கட்டமைப்பு பற்றியதான தீர்மானிக்கும் காரணிகள் என சரியான தெரிவு எவ்வாறாக அமைய வேண்டும்.
2. நிதிப் பகுப்பாய்வு நுட்பங்கள் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்கள் வேறுபாட்டினை ஆராயவும்.
3. 'நடைமுறை மேலாண்மை' நிதியியலில் அதன் தொடர்பு முழுவடிவு பெறுகிறதா அல்லது அதனுடன் நின்று விடுகிறதா.
4. குறுகிய கால நிதித்தேவையை எவ்வாறு நிதியிட முடியும். சிறப்பு காரணிகள் பற்றி தெரிவிக்கவும்.

### 2.4 செயலாக்க மேலாண்மை

1. பராமரிப்பு (பராமரிப்பு செய்ய இழப்புக்கு எதிரான முன் பாதுகாப்பு) இதை முன்னின்று விளக்குக.
2. விலைக் கட்டுப்பாடு மற்றும் விலைக்குறிப்பு நிகழ்வுகள் நடைமுறையில் ஏன் தேவைப்படுகிறது.
3. பணிச்சூழல் (Ergonomics) பாதுகாப்பு பொறியியல் எதனுடன் தொடர்புபடுத்தப்படுகிறது (முன்பு அல்லது பின்பு அல்லது இரண்டும்)
4. சரக்கு கட்டுப்பாடு தொடர்பான வழிமுறைகளை விவரிக்கவும். (விதிமுறைகள்).

### 2.5 திட்ட மேலாண்மை மற்றும் தொழில் முனைவு

1. திட்ட நிதியிடல் மற்றும் திட்ட மேலாண்மை கோட்பாடுகள் திட்ட சக்கரச் சுழற்சியினை முன்னரே எவ்வாறு தீர்மானிக்கிறது.
2. திட்ட மதிப்பீட்டின்படி ஒரு குறிப்பிட்ட வணிக நோக்கத்தினை மதிப்பீடு செய்க.
3. 'சாதுரியமான நிதித்திட்டம்' மூலதன இயக்க சக்தி, பல்வேறு நிதிமூலங்கள் இணைப்பு தன்மையை ஒத்ததா அல்லது கடன் மற்றும் சொந்த முதலீட்டின் விகிதம், நீர்மவிகிதம், சமநிலை புள்ளி ஆய்வை ஒத்ததா?
4. திட்ட கடன் வழங்கல் பயன்பாடு சாதாரண மக்களை ஏன் சென்றடையவில்லை.

### 2.6 உத்தி மேலாண்மை

1. சந்தை பகுப்பாய்வு பயன்பாடு வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் முறையான பகுப்பாய்வோடு அறிக்கை வெளியீடு.
2. இந்தியாவில் ஒரு ஆட்டோமொபைல் தொழிற்சாலையைத் தேர்வு செய்து, அதன் போட்டியாளர்களான வணிக உத்திகளை கணிணூ ஞுனுணூ 'ண் ஹுடிதினு ஹுணிணூ ஞினு ட்ணிஜீனு டீ பயன்படுத்தி மதிப்பீடு செய்யவும்.
3. கடந்த 10 ஆண்டுகளில் நிகழ்ந்த கணிசமான இலாப நோக்கமற்ற நிறுவனங்களின் இணைப்புகளை அடையாளம் காணவும் இந்த இணைப்பு ஒருங்கிணைந்த வளங்கள் மற்றும் திறன் அளவுகள் மற்றும் செயல்பாடுகளின் அளவையும் மேம்படுத்துமா? உதாரணங்கள் மூலம் உங்கள் பதில்களை விரிவுபடுத்தவும்.
4. சம்பிரதாயம் என்பது படைப்பாற்றல் மற்றும் புதுமையின் எதிரி, முறைசாரா என்பது ஒழுக்கம் மற்றும் நம்பகமான செயல்திறன் எதிரி ஒரு நிறுவனம் புதுமையான மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட இருவகைக்கு இது சாத்தியமற்றதா? இந்தக் குணங்களை எவ்வாறு இணைக்கலாம் என்பதை விரிவுபடுத்தவும்.

### 2.7.1 (அ) தொழிலாளர் நலன் மற்றும் தொழில் உறவுகள்

1. ''பணியாளர்களின் உரிமைக்காகவே பணியாளர் சங்கம்'' சரியா (அ) தவறா, உங்களது கருத்துக்களை ஆதாரத்துடன் விளக்குக.
2. ''தொழில்துறை உறவுகளை உறுதி செய்வது மனித வள மேலாளரின் முக்கிய பணியாகும்'' - சரியா (அ) தவறா? ஆதாரத்துடன் விளக்குக.
3. தொழிலாளர் நல நடைமுறை தற்போது இந்தியாவில் எப்படி உள்ளது என்பதை விளக்குக. மேலும் தொழிலாளர் நல நடைமுறையினால் இந்திய பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள தாக்கத்தை விளக்குக.
4. பணியாளர்களின் ஒழுங்கீனத்திற்கான காரணங்களையும், ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும் முறைகளையும் எழுதுக.

### 2.7.1 (ஆ) பயிற்சி மற்றும் மேம்பாடு

1. பயிற்சி மற்றும் மேம்பாடு மனித வளத்தில் ஒரு வித்தியாசத்தை உருவாக்குகிறது - உங்கள் பதிலை நியாயப்படுத்தவும்.
2. ''பயிற்சியும் மேம்பாடு நிறுவனத்திற்கு மட்டும் நன்மை தரக் கூடியது'' - உங்கள் கருத்துக்களை கூறவும்.
3. இந்திய நிறுவனங்களில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் EDP களின் எந்தவொரு ஐந்து வழிமுறைகளை முன்னிலைப்படுத்துங்கள்.
4. ஊழியர்களிடம் பயிற்சிக்கான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவது பற்றி விரிவாக விளக்குக.

### 2.7.2 (அ) விற்பனை மற்றும் விநியோக மேலாண்மை

1. மொத்த வியாபாரம் பற்றி ஒரு கட்டுரை எழுதவும். மொத்த விற்பனையாளர் - விநியோகஸ்தர்களால் நிகழ்த்தப்படும் பல்வேறு செயல்பாடுகளை பொருத்தமான உதாரணங்களின் உதவியுடன் விளக்குங்கள்.
2. விற்பனை அமைப்பின் நோக்கம் என்ன? பொருத்தமான உதாரணங்களின் உதவியுடன் உங்கள் பதிலை விளக்கவும்.
3. புதிதாக விற்பனைக்கு சேர்க்கப்படுவார்களின் பல்வேறு ஆதாரங்கள் பற்றி விளக்கவும். ஒரு விற்பனை அமைப்பை அமைக்க நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்? பொருத்தமான உதாரணங்களின் உதவியுடன் விளக்குங்கள்.
4. இந்தியாவியல் என்ன சிறப்பு விநியோக சவால்கள் உள்ளன? வெளிநாட்டு நிறுவனங்கள் இந்த சவால்களை சமாளிக்க சிறந்த வழி என்ன? விளக்குக.

### 2.7.2 (ஆ) சந்தையியல் ஆய்வு மற்றும் நுகர்வோர் நடத்தையியல்

1. சந்தை ஆராய்ச்சியில் பயன்படுத்தப்படும் பல்வேறு மாதிரி நுட்பங்கள் பொருத்தமான உதாரணத்துடன் விளக்குக.
2. புதிதாகத் தொடங்கப்பட்ட தயாரிப்புகளின் விற்பனை மேம்பாட்டுத் திறனை அளவிடுவதற்கான ஆராய்ச்சித் திட்டத்தை உருவாக்குங்கள்.
3. தனிப்பட்ட வருமானம் என்பது நுகர்வோர் நடத்தை நிர்ணயிக்கும் காரணி - நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா? நுகர்வோர் நடத்தை நிர்ணயிக்கும் மற்ற பொருளாதார காரணிகளை விவரிக்க.
4. சந்தை ஆராய்ச்சி செயல்முறையின் மூலம் தயாரிப்புகளின் ஏற்றுக் கொள்ளத்தக்க நிலையை தீர்மானிக்கப்படலாம். உங்கள் கருத்துக்களை ஒரு எடுத்துக்காட்டுடன் விவாதிக்கவும்.

### 2.7.3(அ) முதலீடு, பங்குகள் மற்றும் பகுப்பு நிர்வாகம்

1. பொருளாதாரத்தின் தற்போதைய நிலையை அறிந்து கொள்ள பங்குச் சந்தை இயக்கங்களை ஆய்வு செய்வதினால் பயனுள்ளதாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?அப்படியானால் விளக்கவும்.
2. பல்வேறு சம பங்கு மதிப்பீட்டு அணுகுமுறைகளை சுருக்கமாக விவாதிக்கவும். முதலீட்டாளர்களுக்கு இன்னும் இது பயன்படுகிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? விவாதிக்கவும்.
3. எதிர்கால விலை மாற்றங்களை முன்னறிவிப்பதற்காக கடந்த விலை மாற்றங்களைப் பயன்படுத்தலாம் என்று தொழில்நுட்பத்தை ஆய்வாளர்கள் நம்புகின்றனர். இந்த நம்பிக்கையை அவர்கள் எப்படி நியாயப்படுத்துகிறார்கள்? விரிவாக விவாதிக்கவும்.
4. நன்கு அறியப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச பங்கு குறியீடுகளில் சிலவற்றைக் குறிப்பிடவும்? BSE குறியீடு எவ்வாறு கணக்கிடப்படுகிறது? உதாரணங்கள் உதவியுடன் விளக்கவும்.

### 2.7.3(ஆ) நிதியியல் சேவைகள் மேலாண்மை

1. ‘‘ரிசர்வ் வங்கி இந்தியாவின் வங்கிகளின் வங்கியாகும். நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?- விவாதிக்கவும்.
2. இந்த நாட்டில் தொழில்துறை நிதியளிப்பில் வணிக வங்கிகளின் பங்கு மற்றும் முன்னேற்றத்தை விரிவாக விவாதிக்கவும்.
3. நீங்கள் ஒரு வியாபாரி வங்கியாளராக (Merchant Banker) இருந்தால், ஒரு நிறுவனத்தின் ஐ.பி.ஓ முன்மொழிவை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு நீங்கள் என்னென்ன விஷயங்களை கருத்தில் கொள்ள வேண்டும்? சுருக்கமாக விவாதிக்கவும்.
4. நிதியியல் சேவைகள் தொடர்பான பல்வேறு வகையான அபாயங்களைக் கண்டறிந்து, அந்த அபாயங்களை நிர்வகிக்கக்கூடிய வெவ்வேறு உத்திகளை பற்றி விவாதிக்கவும்.

### 2.7.4 (அ) உற்பத்தி, திட்டம், கட்டுப்பாடு மற்றும் பராமரிப்பு மேலாண்மை

1. ஆலை மற்றும் உபகரணங்கள் பழுது பார்த்தல் தடுப்பு, பராமரிப்பு முயற்சியின் ஒரு முக்கிய பகுதியாக உள்ளது - விவாதிக்கவும்.
2. பொருட்கள் மேலாண்மையின் நோக்கம் என்ன? இது பொருட்களின் தேவை திட்டமிடும் போது எவ்வாறு மாற்றம் பெருகிறது?
3. நீண்ட கால மற்றும் குறுகிய கால திட்டங்களைக் கணிப்பதில் பயன்படுத்தப்படும் பல்வேறு தரவுகளின் பட்டியலை பட்டியலிட்டு விவாதிக்கவும்.
4. தரத்தைப் பற்றிய வாடிக்கையாளர்களின் உணர்வை விளக்குங்கள். வாடிக்கையாளர்களின் புகார்களைக் கையாளுவதற்கு ஒரு உற்பத்தி நிறுவனத்தால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை பற்றி விவாதிக்கவும்.

### 2.7.4 (ஆ) தர மேலாண்மை

1. "முழுமையான தரத்தினை முதல் முயற்சியிலேயே அடைவது இயலாத காரியம்" - விளக்குக.
2. தொழிற்சாலைகளில் முழுமைத் தர மேலாண்மை (TQM) செயல்படுத்தலில் பல்வேறு உள்ள படிநிலைகளை விவரிக்கவும்.
3. நான்கு பிரதான தரச் சகாப்தம் பட்டியலிட்டு விளக்கவும். உங்கள் விருப்பத்தில் ஒரு நிறுவனத்தைத் தேர்வு செய்து, தரத்தின் கால கட்டங்களைக் குறித்து தற்போதைய நிலையை மதிப்பீடு செய்யவும்.
4. ISO 14000 தர முறைமைக்கு ஒரு சிறந்த நடைமுறைப்படுத்தல் முறைமையை உருவாக்க விரும்பும் ஒரு நிறுவனத்தில் நீங்கள் பணியாற்றி வருகின்றீர்கள். திறம்பட செயல்பாட்டு முறையை வளர்ப்பதில் உங்கள் நிறுவனத்திற்கு எப்படி உதவுவீர்கள்?

### 2.7.5 (அ) தனித்திறன் அதிகரிப்புக் கருவிகள்

1. வரிசையான மதிப்புக்களை எவ்வாறு எக்ஸலில் (Excell) உருவாக்கலாம் என்பதை உதாரணத்துடன் விளக்குக.
2. இணைய வலையில் தேடவல்ல கருவியின் (browser) பல்வேறு படிகளை விவரி.
3. ஒரு சிறந்த பவர் பாயிண்ட் (Power Point) தொகுப்பினைத் தயாரிப்பிற்கான பல்வேறு படிகளை விளக்குக.
4. நெட்ஸ்கேப் கோர்ப்பான் மூலம் நீங்கள் ஒரு பக்கத்தை எவ்வாறு உருவாக்குவீர்கள் என்பதை விளக்குக.

## 2.7.5 (ஆ) தகவல் தொழில் நுட்பம்

1. மின்னனு வியாபார வகைகளை பயன்படுத்த காரணங்களை விவரி.
2. ஒரு நிறுவனத்தன் மேலாளராக, பொருள் தயாரிப்பிலிருந்து சேவைக்கு ஒரு நிறுவனம் மாறத் தேவைப்படும் படிகளை விளக்குக.
3. கணிணி வலைப் பின்னலில் எவ்வாறு கணிணி இணைக்கப்படுகிறது என்பதை தகுந்த வரைபடத்துடன் விளக்குக.
4. நுண்ணிய பயன்பாடுகளின் கண்டுபிடிப்புகளில் இணையத் தளத்தின் பங்கு பற்றி உங்கள் கருத்து என்ன?